# பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல்

*சாலையில் வாகனம் ஓட்டுதலுக்கான அடிப்படை செயல்முறை மற்றும் விதிமுறைகள்*

# அச்சிடலுக்கான விபரங்கள்

இந்தியாவின் வேகமான வளர்ச்சியின் காரணமாக பலதரப்பட்ட பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நமது சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் காரணமாகவும் மற்றும் மொபைல் போனில் பேசியபடி வாகனத்தை ஓட்டுதல், வண்டி ஓட்டும் போது மது அருந்துதல் மற்றும் புகை பிடித்தல், போன்ற அனைத்தும் மானுட வாழ்க்கைக்கும் மற்றும் சொத்துகளுக்கும் பெரிய அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

பொறுப்புற்ற வாகன ஓட்டுதலின் காரணமாக ஏற்படுத்தும் விபத்துகள் மற்றும் காயங்கள் குறித்த செய்திகள் நிரம்பி வழிகின்றன. நாம் எச்சரிக்கையாக இருந்தால் மட்டுமே இப்புள்ளி விபரங்களின் ஒரு பகுதியாக நாம் மாறாமல் வாழ முடியும்.

சக சாலை பயன்பாட்டாளர்கள் குறித்த அக்கறை மிக்க வாகன ஓட்டுதலுக்கான, கல்வியறிவு மற்றும் விழிப்புணர்வு மிக்க புதிய கலாச்சாரம் ஒன்றினை உருவாக்குவதும் மற்றும் சாலையை பொறுப்புடன் பயன்படுத்துவதும் மட்டுமே சாலைகளில் தினசரி ஏற்படும் விபத்துகள் மற்றும் இறப்புகளை குறைப்பதற்கான வழியாகும். நம்மால் சாலைகளின் தன்மையை மாற்ற முடியும் என்னும் பொறுப்பினையும் மற்றும் அக்கறையையும் நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

Language: Tamil

வெளியிடுவோர்: ஹ்யூபர்ட் எப்னர் (இந்தியா பிரைவேட் லிமிடெட்).
C-18, சிராக் என்க்லேவ்
புது டெல்லி - 110 048 (இந்தியா)
தொபே.: +91 11 4610 7654
மின்னஞ்சல்: driving@he-india.com
இணையதளம்: www.he-india.com
© அனைத்து உரிமைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளது

பதிப்பு: செப்டம்பர் 2009

இந்த வெளியீட்டின் எந்தவொரு பகுதியும் மறு உருவாக்கம், சேமிப்பு அல்லது மின், மெக்கானிக்கல், நகல், பதிவு போன்றவைகளின் வழியாக நகல் எடுத்தல் போன்றவைகள் பதிப்பகத்தின் முன்அனுமதியின்றி மேற்கொள்ளப்படக் கூடாது. பொது வாடகைக்கு விடுவதற்கும் அனுமதியில்லை

# பொருளடக்க அட்டவணை




- **அறிமுகம்** — 1
  - இந்திய சாலை - கண்ணோட்டம் — 1
  - சாலை பயன்பாட்டாளர் மற்றும் சட்டம் — 1





- **போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்கள்** — 3
  - பொதுவான சாதனங்கள் — 3
  - போக்குவரத்து காவலர் அல்லது அலுவலர் — 3
  - போக்குவரத்து விளக்குகள் — 5
  - போக்குவரத்து அல்லது சாலை விளக்குகள் — 7
  - கட்டாய சாலை குறியீடுகள் — 7
  - சாலை எச்சரிக்கை குறியீடுகள் — 10
  - தகவலளிப்பு சாலை குறியீடுகள் — 15
  - போக்குவரத்து அல்லது சாலை தடக் குறியீடுகள் — 17
  - நகரும் சாலை சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் — 19





- **சாலை மற்றும் தற்காப்பு வாகன ஓட்டுதன் விதிகள்** — 21
  - சாலை தடத்தை கடைபிடித்தல் — 21
  - வேகம் — 23
  - நிறுத்தப்படும் தூரம் — 25
  - பின்தொடரும் தூரம் — 26
  - முந்திச்செல்லுதல் — 28
  - இடது மற்றும் வலது பக்கம் திரும்புதல் — 30
  - வண்டியை பின்புறமாக ஓட்டுதல் — 31
  - ரு-வளைவு — 32
  - சாலை சந்திப்புகளில் வழிவிடுவது மற்றும் பாதுகாப்புக்கான உரிமை — 33
  - சிக்னல் விளக்குகள் இல்லாத சாலை சந்திப்புகளை நெருங்கும் போது — 34
  - சிக்னல் விளக்குகள் உள்ள சாலை சந்திப்புகளை நெருங்கும் போது — 35
  - ரவுண்டானா — 35
  - வண்டி நிறுத்துமிடம் — 36





- **பல்வேறு வகைப்பட்ட சாலை உபயோகிப்பாளர்கள்** — 39
  - பாதசாரிகள் — 39
  - சைக்கிள் ஓட்டிகள் — 40
  - அவசரகால வாகனங்கள் — 41
  - மெதுவாக செல்லும் வாகனங்கள் — 41
  - பெரிய மற்றும் கனரக வாகனங்கள் — 41
  - பள்ளி பேருந்துகள் — 41
  - ஆட்டோ ரிக்ஷாக்கள் — 42
  - இருசக்கர வாகன ஓட்டிகள் — 42
  - மிருகங்கள் — 43
  - பயிற்சி வாகனங்கள் — 43

# அறிமுகம்



நெடுந்தொலைவில் உள்ள பகுதிகளைக்கூட இணைக்கின்றவாறு, கடும் சிக்கலான மற்றும் மிகப்பெரிய சாலை ஒருங்கமைப்பு ஒன்றை இந்தியா கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இந்தியாவில் ஏறக்குறைய 6 கோடி வாகனங்கள் இருக்கின்றன. வாகனங்களின் எண்ணிக்கை உயரும்போது, விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் உயர்கிறது.

எனவே, முறையாக பயிற்சிபெற்ற ஓட்டுனர்களுக்கான தேவை இருக்கிறது. பாதுகாப்பாக ஓட்டும் நிலை, முறையான பயிற்சியின் வழியாகவே வரும். எப்படி ஓட்டுவது என தெரிந்திருப்பது, ஓட்டுனர் உரிமத்தைப் பெறுவது மற்றும் வாகனத்திற்கான சான்றிதழை வைத்திருப்பது என்பவை மட்டும் போதுமானதல்ல. சாலைப் பாதுகாப்பு விதிகளை நீங்கள் கடைபிடிக்கவும், மதிக்கவும் வேண்டும். இவைகள் நமது பாதுகாப்பிற்காகவே இருக்கின்றன. இதனால், நமது சாலைகளில் உயிர்களை பாதுகாக்க இயலும்.

## » இந்திய சாலை கண்ணோட்டம்



நடத்தப்பட்ட சர்வே மற்றும் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் ஆட்டோமொபைல் வாகனங்களின் எண்ணிக்கை 120 மடங்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. எனினும், சாலை கட்டமைப்பு 9 மடங்கு மட்டுமே விரிவடைந்திருக்கிறது.

நாட்டிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 5.5 கோடிகளுக்கும் அதிகமாகும். மற்றும் ஒவ்வொரு ஆண்டும் இந்த எண்ணிக்கை 25 இலட்சம் என மிக உயர்ந்த விகிதத்தில் வளர்ந்து வருகிறது.

இந்தியாவில், தினசரி பயணிப்பவர்களுக்கு சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஒரு பயமுறுத்தும் தளமாகவே இருக்கின்றன. சாலைகளைப் பயன்படுத்துவோர் விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை தவிர்ப்பதற்கு போக்குவரத்து விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிந்திருத்தல் வேண்டும். பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டும் ஒரு ஓட்டுனராக இருப்பதற்கு சாலைகளைப் பயன்படுத்தும் அனைவரைக் குறித்தும் பொறுமையும், கரிசனமும் இருக்கவேண்டியது இன்றியமையாத அவசியமாகும்.

நெடுஞ்சாலைக்கான ஒழுக்கமுறை என்பது, ஒரு எளிதான விதிகளின் தொகுப்பு. ஆனால், இவற்றை செவ்வனே கடைப்பிடிப்பது, சாலைகளை பாதுகாக்க உதவுவதோடு, உயிர்களையும் காப்பாற்றும்.

சாலைகளைப் பயன்படுத்துவதில், அதிமுக்கியமான அம்சங்கள் கீழ்வருமாறு:

- ஓட்டுநரின் பொறுப்புகள்:
- போக்குவரத்து விதிகள் மற்றும் குறியீடுகள் பற்றிய அறிவு மற்றும் அவற்றை புரிந்துகொள்ளும் திறன்:
- வாகனம் பற்றிய போதுமான அறிவு மற்றும் அதை சரியாகப் பராமரித்தல்
- வாகனத்தை ஓட்டும்போது, சாலைகளில் ஒழுங்குமுறையை கடைப்பிடித்தல்
- பிற சாலை பயன்பாட்டாளர்களின் நடத்தை
- சிரமமான மற்றும் ஆபத்தான சமயங்களின்போது, பதில்வினையாற்ற மற்றும் விரைவாக முடிவெடுக்கும் திறன்
- முதலுதவி குறித்த அடிப்படை அறிவு

## » சாலைப் பயன்பாட்டாளர் மற்றும் சட்டம்

ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டுவதில் மாபெரும் பொறுப்பு உடன் இருக்கிறது. சாலைப் போக்குவரத்து விதிகள், கட்டுப்பாடுகள் பற்றிய அறிவு மற்றும் புரிதல் மற்றும் பிற சாலைப் பயனாளிகள் மீது கவனம் மற்றும் கரிசனம் உங்களையும் மற்றும் பிறரையும் காப்பாற்ற உதவுவதோடு, நமது சாலைகளில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகிறது.

சாலை விதிகளை அறிந்திருப்பது மற்றும் கடைப்பிடிப்பது விபத்துகளை குறைக்கவும் மற்றும் உயிர்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

பாதசாரிகள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், ஊனமுற்றோர், பார்வையற்றோர், சைக்கிள் மற்றும் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவோர் மற்றும் குதிரை வண்டிகள் என இவை அனைவருமே சாலையைப் பயன்படுத்துவோர்களில் அடங்குவர்.

# அறிமுகம்

போக்குவரத்து விதிகள் சட்டப்படி கடைப்பிடிக்க வேண்டியவை ஆகும். இவற்றை கீழ்படியவோ மற்றும் கடைப்பிடிக்கவும் தவறுவது என்பது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். இதற்காக அபராதங்கள் விதிக்கப்படலாம்: ஓட்டுனர் உரிமம் ரத்து செய்யப்படலாம் மற்றும் கடுமையான நிகழ்வுகளில் சிறைத்தண்டனை கூட விதிக்கப்படலாம்.

பயிற்சி பெறாத ஒரு ஓட்டுனர் மற்றும் கவனமில்லாமல், அசட்டையாக ஓட்டுவதால் கடுமையான விளைவுகள் ஏற்படும் மற்றும் உயிருக்கும், சொத்துக்கும் சேதம் விளையும்.

ஒவ்வொரு ஆண்டும் இந்திய சாலைகளில் 1,00,000 க்கும் அதிகமான நபர்கள் உயிரிழக்கின்றனர்.

கூடுதலாக 10,00,000 இலட்சம் பேர் காயமடைகின்றனர் அல்லது உறுப்புகளை இழக்கின்றனர். இவர்களுள் அநேகர் பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுவோர் மற்றும் இருசக்கர வாகனம் ஓட்டுவோராவர்.




இந்தியாவில் வாகனத்தை ஓட்டுவதற்கு கூடுதல் கவனம், திறன் மற்றும் எச்சரிக்கைத் தேவைப்படுகிறது.

சாலைப் பாதுகாப்பு கல்வி இல்லாமலிருப்பது, உயிரிழப்பு மற்றும் காயங்களை விளைவிக்கிறது அல்லது தீவிர உடல்நலப் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது. பல சாலை விபத்துகளினால், அதிக அளவில் மனிதர்களுக்கு கடும் சிரமங்களும் மற்றும் கடும் செலவீனங்களும் ஏற்படுகின்றன. வீட்டிற்காக உழைத்து சம்பாதிப்பவர் உயிரிழந்தால், அது அக்குடும்பத்தில் மிகக்கடுமையான பிரச்சனையை உருவாக்குகிறது. வறுமைக்கும் ஒரு காரணமாக இது அமைவதோடு, எதிர்மறையான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது.

சாலை விபத்துகளினால், இறப்பு மற்றும் திறனிழப்பு என்பது உலகெங்கிலும் உயர்ந்துகொண்டே வருகிறது. 2020 ஆம் ஆண்டுக்குள், இயற்கைக்கு மாறான இறப்புகளுள் சாலை விபத்துகளினால் உயிரிழப்பது மூன்றாவது முக்கிய காரணமாக அமையும் என்று உலகச் சுகாதார நிறுவனம் மதிப்பிட்டிருக்கிறது.

தற்போதைய சாலை நிலைகள் சிரமமும், குழப்பமும் விளைவிப்பதாக இருக்கின்றன.கீழ்கண்டவற்றை நாம் மேம்படுத்தவேண்டும்:


- ஓட்டும் திறன் மற்றும் பயிற்சி
- சாலை மற்றும் போக்குவரத்து கட்டமைப்பு
- சாலைகளைப் பயன்படுத்தும் அனைத்து நபர்கள் மற்றும் சட்டஅமலாக்க அதிகாரிகளின் மனப்பான்மையை மாற்றுவதற்காக கல்வி அமைப்பு

கீழே தரப்பட்டுள்ள திட்டங்களை அமல்படுத்துவது, சாலை விபத்துகளின் எண்ணிக்கையை குறிப்பிட்ட அளவு குறைப்பதற்கும் சிறந்த சாலை வசதிகளை வழங்குவதற்கும் உதவக்கூடும்:

- சாலை கட்டமைப்பிற்கு திறன்மிகு திட்டமிடல்
- சாலைப் பாதுகாப்பிற்கான முறையான மேலாண்மை தொழில்நுட்பங்கள்




- சாலைகளைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும் பயிற்சியளிக்க போதுமான கட்டமைப்பு வசதி
- விழிப்புணர்வு நிகழ்வுகள்: அதைத் தொடர்ந்து நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள்
- பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் ஜாக்கிரதையாக ஓட்டுவது குறித்த பயிற்சித் திட்டங்கள்
- சாலைப் பாதுகாப்பு என்பது, அனைவருக்கும் பொதுவான பொறுப்பு என்பதோடு, ஒவ்வொரு நபரின் பொறுப்பாகவும் இருக்கிறது.




பாதுகாப்புடன் ஓட்டுவதற்கு முறையான பயிற்சி, உயர்நிலையிலான எச்சரிக்கை உணர்வு, கனிவு மற்றும் பிற சாலைப் பயனாளிகளின் மீது கரிசனம் ஆகியவைகளின் தொகுப்பு சாலைப் பாதுகாப்பை உறுதியாக்கும்.

# போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்கள்



300175

சாலையில் ஒழுக்கத்தை பராமரிக்கும் பொருட்டும் மற்றும் விபத்துகளை தவிர்ப்பதன் பொருட்டும் அரசாங்கம் அல்லது உள்ளூர் நிர்வாகத்தினரால் எச்சரிக்கை செய்யவும், தகவல் தெரிவிக்கவும் மற்றும் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தவும் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், போக்குவரத்து கட்டுப்பாட்டு உபகரணங்கள் என அழைக்கப்படும்.

பாதசாரிகள் அல்லது வாகன ஓட்டுனர்கள் என சாலையைப் பயன்படுத்தும் அனைவருக்கும் இப்பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ள விதிமுறைகள் பொருந்தும்.

## » பொதுவான சாதனங்கள்

ஐந்து வகையிலான போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்கள் உள்ளன.

- கீழ்வருமாறு அவைகள்:
- போக்குவரத்து அலுவலர் அல்லது காவலர்
- போக்குவரத்து விளக்குகள் அல்லது சாலை சிக்னல்கள்
- போக்குவரத்து அல்லது சாலை சிக்னல்கள்
- போக்குவரத்து, சாலை மற்றும் வழித்தட குறியீடுகள்
- மொபைல் சாலை தடுப்புகள் அல்லது பிற சாதனங்கள்

## » போக்குவரத்து காவலர் அல்லது அலுவலர்

கை குறியீடுகள் / மார்ஷலிங் வழியாக, போக்கு வரத்து காவலர்கள், அலுவலர், என்சிசி மாணவர்கள், ஊர் காவலர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களால் நியமிக்கப்படுவார்கள் போக்குவரத்தை கட்டுப்படுத்துவார்கள். மேற்கூறிய அனைத்து போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்களையும் விட, இவர்களின் அறிவுறுத்தல்களே இறுதியானவை. உதாரணத்திற்கு, போக்குவரத்து விளக்கு பச்சையாக இருந்தாலும் இவர்கள் நிற்கும் படி செய்கை செய்தால் நீங்கள் நிச்சயம் நிற்க வேண்டும்.



300191

## கை செய்கைகள் பின்வருமாறு இருக்கும்

- பின்னாலிருந்து வரும் வாகனத்தை நிறுத்த



300554

- முன்னாலிருந்து வரும வாகனத்தை நிறுத்த



300555

- எச்சரிக்கை - அனைத்துப் போக்குவரத்தும் நிறுத்தப்படுகிறது



300556

- ஒரே நேரத்தில் முன்புறத்திலிருந்தும் மற்றும் பின்புறத்திலிருந்தும் வரும் வாகனத்தை நிறுத்த



300557

- இடது பக்கத்திலிருந்தும் மற்றும் வலது பக்கத்திலிருந்தும் வரும் வாகனங்களை நேராகச் செய்ய அனுமதித்தல்



300558

# போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்கள்

- இடப்பக்கத்திலிருந்தும் மற்றும் வலது பக்கத்திலிருந்தும் வரும் வாகனங்களை வலது பக்கம் திரும்ப அனுமதித்தல்



300559

- இடப்பக்கத்திலிருந்து நேராகச் செல்லும் வாகனங்களை மட்டும் அனுமதித்தல



300560

- இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் செல்லும் வானகங்களை மட்டும் அனுமதித்தல்



300561

- வலது பக்கத்திலிருந்து நேராகச் செல்லும் வாகனங்களை மட்டும் அனுமதித்தல்



300562

- வலது பக்கத்திலிருந்து வலது பக்கம் திரும்பும் வாகனங்களை மட்டும் அனுமதித்தல்



300563

## இடது பக்கம் தடையின்றி திரும்பலாம்

சிறிய அல்லது நடுத்தர சந்திப்புகளில் பொதுவாக இடது பக்கம் தடையின்றி திரும்ப முடியாது

பெரிய அளவிலான ஜங்ஷன்கள் / சந்திப்புகளில் இடது பக்கம் திரும்ப முயற்சிக்கும் முன், போக்குவரத்து சிக்னல்களைப் பார்க்கவும்.



300754

போக்குவரத்து சிக்னல்கள் இடது பக்கம் உள்ள சந்திப்புகளில், இடது பக்கம் தடையின்றி திரும்பாமல், சிக்னல் உங்களை இடது பக்கம் திரும்ப அனுமதிக்கும் வரை காத்திருக்கவும்.

போக்குவரத்து சிக்னல்களுக்குக் கூடுதலாக, இடது பக்கம் தடையின்றி திரும்பலாமா அல்லது கூடாதா என்பதை விளக்கும் கட்டுபாட்டு பலகைகளும் வைக்கப்பட்டிருக்கும்.

தடையின்றி திரும்பலாம் என்னும் பலகைகள் இல்லாத பட்சத்தில், பச்சை நிற சிக்னல் வரும் வரை காத்திருக்கவும்.



300565

# போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்கள்

## » போக்குவரத்து விளக்குகள்

பொதுவாக, சந்திப்புகளில், சாலையின் போக்குவரத்தை ஒரு கட்டமைந்த முறையில் கட்டுப்படுத்த போக்குவரத்து விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். இந்த போக்குவரத்து விளக்குகளின் படியே அனைத்து போக்குவரத்தும் நடைபெற வேண்டும். உங்கள் எதிர்பக்கம் உள்ள போக்குவரத்து சிக்னல்களை நீங்கள் நிச்சயம் பின்பற்ற வேண்டும்.

இந்த போக்குவரத்து சிக்னல்கள் சாலை சந்திப்பின் மையத்தில் வைக்கப்பட்டிருக்கும். சாலை டிவைடர் இல்லாத பட்சத்தில் சாலையின் இடது பக்கத்தில் அது வைக்கப்பட்டிருக்கும்.


300203



பொதுவாக இரண்டு விளக்குகள் வைக்கப்பட்டிருக்கும். ஒன்று போக்குவரத்திற்கு அருகிலும் மற்றும் மற்றொன்று சாலையில் சற்று தள்ளியும் அமைக்கப்பட்டிருக்கும். இதன் காரணம் அருகிலுள்ள விளக்குகள் நெரிசல் காரணமாக சில நேரங்களில் தெரியாமல் இருப்பதே.

போக்குவரத்து விளக்குகளில் மூன்று வண்ணங்கள் இருக்கும். இவை பின்வரும் உத்தரவுகளை வெளிப்படுத்துபவைகள் ஆகும்.

300453




### சிகப்பு விளக்கு


300202



சிகப்பு விளக்கு எரிந்தால் நீங்கள் வாகனத்தை நிறுத்த வேண்டும் என்று அர்த்தம் ஆனால் நீங்கள் இடது பக்கம் திரும்ப வேண்டும் என்றால், இடது பக்கம் தன்னிச்சையாக திரும்பக்கூடாத பகுதி எனில் அதற்கான சிக்னல் வரும் வரை காத்திருக்கவும்.

### மஞ்சள் விளக்கு

300204



மஞ்சள் விளக்கு என்றால் எச்சரிக்கை.

சிகப்பு விளக்கிற்குப் பின் இது காட்டப்பட்டால் புறப்படத்தயாராக வேண்டும் என்றும் பச்சை விளக்கிற்குப் பின் காட்டப்பட்டால் வேகத்தை குறைத்து நிறுத்தத் தயாராக வேண்டும் என்றும் அர்த்தமாகும்.

### பச்சை விளக்கு

300206




பாதுகாப்பாக இருப்பின், நீங்கள் செல்லலாம் என்பதே பச்சை விளக்கின் அர்த்தமாகும்.

எதுவாக இருப்பினும் சூழலுக்கு ஏற்ப திடீரென்று வாகனத்தை நிறுத்த ஒருவர் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும்.

### சிகப்பு அம்புக்குறி விளக்கு


300493



சிகப்பு அம்புக்குறி விளக்கு போடப்பட்டால் அத்திசையை நோக்கிச் செல்லும் போக்குவரத்து நிற்க வேண்டும் என்று அர்த்தமாகும்.

### பச்சை அம்புக்குறி விளக்கு

300505



பச்சை அம்புக்குறி விளக்கு போடப்பட்டால், அந்த திசையில் செல்ல விரும்பும் வாகனங்கள் செல்லலாம் என்று அர்த்தமாகும்.

# போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்கள்

## ஒளிரும் சிகப்பு விளக்கு

வேகத்தைக் குறைப்பதற்கான எச்சரிக்கையே ஒளிரும் சிகப்பு விளக்காகும். இவைகள் பெரும்பாலும், எதிரில் வரவிருக்கும் முக்கிய சாலைகள், நெடுஞ்சாலையைக் கடக்கும் குறுக்கு சாலைகள், பெயரற்ற ரயில்வே பாதை அல்லது ஒரு நெரிசல் மிகுந்த சாலையில் நீங்கள் இணையும் போதோ / சேரும் போதோ / கடக்கும் போதோ அமைக்கப்பட்டிருக்கும்.

300210




நீங்கள் எப்பொழுதும், முதலில்

- நிற்க வேண்டும்
- கவனிக்க வேண்டும்
- பாதுகாப்பாக இருக்கும் போது மட்டும் புறப்பட வேண்டும்.

## ஒளிரும் மஞ்சள் விளக்கு

ஒளிரும் மஞ்சள் விளக்கானது, ஒரு எச்சரிக்கை குறியீடாகும். முக்கிய சாலையில் ஒரு இணைப்பு சாலை இணைதல், சாலை பிரிப்பானில் அல்லது போக்குவரத்தில் ஒரு இடைவெளி ஏற்படும் இடங்களில் இது அமைக்கப்பட்டிருக்கும்.

300211



நீங்கள் எப்பொழுதும் முதலில்

- நிற்க வேண்டும்
- கவனிக்க வேண்டும். பாதுகாப்பாக இருக்கும் போது மட்டும் புறப்பட வேண்டும்.

## பாதசாரிகளுக்கான சிக்னல் விளக்குகள்

பாதசாரிகளுக்கான சிறப்பு சிக்னல் விளக்குகள். சாலையைக் கடக்க காத்திருக்கும் பாதசாரிகளுக்கு முன்பாக மனித வடிவுடனோ அல்லது மனித வடிவம் இல்லாமலோ சிக்னல் விளக்குகள் இருக்கும்.

சிக்னல் பச்சை விளக்கு எரியும் வரை காத்திருந்து, எரிந்தவுடன் அவர்களுக்கான ஜீப்ரா கிராஸிங்கில் மட்டுமே சாலையை கடக்க வேண்டும்.

300215




சிகப்பு என்றால் நிற்க வேண்டும்.

300212



சிகப்பாக மாறுவதற்கு முன் விளக்குவிட்டு விட்டு ஒளிர்ந்தால் எச்சரிக்கை என்ற அர்த்தம்

300216



பச்சை என்றால் கடக்கலாம் என்று அர்த்தமாகும்.

300214

